------------

# The Return of the Church from the Wilderness

**R5628**

# சபை வனாந்தர நிலைமையி–ருந்து திரும்புதல்

ஒரு வனாந்தர நிலைமை என்பது நாகரீக உலக ஆசீர்வாதங்களி–ருந்து பிரிந்திருத்தல் ஆகும். இது உலகி–ருந்து ஒரு பிரிக்கப்படும், துண்டிக்கப்படும் நிலைமை. சபையின் காரியத்தில், அது 1260 அடையாளமான நாட்களுக்கு வனாந்தரத்திற்கு செல்லும்படி இரண்டு செட்டைகளை தேவன் அதற்கு கொடுத்தாக வேதத்தில் நாம் படிக்கிறோம். சபையானது தனது சொந்த விருப்பத்தின்படி, உலக சமுதாயத்தின் சலுகைகள் மற்றும் அனுகூலங்களை நிராகரித்து வனாந்தர நிலைமைக்குச் சென்றது என்று தெரிகிறது; ஒரு பொதுவான ஒதுக்கி வைக்கப்பட்ட நிலைமைக்குச் சென்றது.

நிழலான பாவநிவாரண நாளின் ப–களைப்

பற்றிய வர்ணனையில் போக்காடு வனாந்தரத்திற்கு சென்றதாக நாம் பார்க்கிறோம். ஆனால் நிஜத்தில், உண்மையுள்ள மற்றும் அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பார் தானாகவே வனாந்தர நிலைமைக்குச் செல்கிறார்கள், மற்றவர்களோ நிர்பந்தத்தால் செல்லுவார்கள். எனினும் இரண்டு வகுப்பாரும் ஒரே வித அனுபவங்களையே பெறுவார்கள். சபை கர்த்தரிடத்திலும், சத்தியத்திலும் உண்மையுள்ளவர்களாயிருப்பதினிமித்தம் உபத்திரவங்களை அனுபவிக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் உலகக் காரியங்களால் சூழப்பட்டிருக்கும்போது அவர்கள் வனாந்தர நிலையில் இருக்க முடியும். நாம் உலகத்தில் இருந்தாலும், உலகத்தி–ருந்து பிரிந்திருக்கிறோம். அதன் காரியங்களி–ருந்து தனித்து இருக்கிறோம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில், சபையானது 1260 வருடங்கள் வனாந்தர நிலைக்கு சென்றது என்றும், அந்த காலக்கட்டத்தில் உலகக் காரியங்கள் ஒரு பெரிய முறைமையின் கீழ் இருந்தது என்றும் நாம் வாசிக்கிறோம். இந்த காலப்பகுதி கிபி. 539ல் ஆரம்பித்து 1799ல் முடிவடைந்தது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சமூகத்தி–ருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட இந்த காலம், வனாந்தர நிலைமை என்று அழைக்கப்படுகிறது. இந்த வனாந்தர நிலைமைக்கு ஒருவன் சென்றுவிட்டால், துன்புறுத்தப்படவேண்டும், சுடப்படவேண்டும், அல்லது தூக்கி–டப்படவேண்டும் என்பதல்ல, எனவே வனாந்தர நிலைமை என்பது துன்பப்படுவதைக் குறிக்காமல், பிரிந்திருப்பதை மட்டுமே குறிக்கிறது.

உருவக மொழியில் நகரம் என்பது, உலகத்தில் மகிமை, மேன்மையான ஸ்தானம் மற்றும் முக்கியத்துவத்தை குறிக்கிறது. ஆனால் வனாந்தர நிலைமை என்பது அதற்கு எதிரான (மாறுபட்ட) நிலையை அதாவது அசட்டைபண்ணப்பட்ட, ஒதுக்கித்தள்ளப்பட்ட நிலையை குறிக்கிறது. 1260 தீர்க்கதரிசன நாட்களில் சபையானது ஒதுக்கப்பட்ட நிலைமையில் இருந்தது. அரசாங்கங்கள் சபையை கண்டுகொள்ளவில்லை. ஆனால் தன்னைத்தானே உயர்த்திக்கொண்டு “பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற நகரமாகிய ” –இரகசியமாகிய பாபிலோனை, மகாபெரிய முறைமையை மிகவும் சிரத்தையுடன் அவர்கள் கவனித்தார்கள்.

### வனாந்தர நிலைமையி-ருந்து திரும்புதல்

அந்தக்காலத்தின் முடிவில், அதாவது 1799–ருந்து போப்பரசின் வல்லமை முறிக்கப்பட்டு, போப், பிரான்சு நாட்டுக்கு கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட பொழுது, பொதுவாக உலகில் சபையைக் குறித்து ஒரு எண்ணம் அங்கீகாரத்திற்கு வந்தது. போப்பை கிறிஸ்துவின் பிரதிநிதியாக தவறாக நினைத்துக்கொண்டிருந்தோம் என்பதை தேசங்கள் உணர்ந்தன. மகாபெரிய ஸ்தாபனமாகிய போப்பரசிடமிருந்து மற்றவர்களை தண்டிக்கிற அதிகாரம் நீக்கப்பட்டு, மற்றவர்களோடு போராடும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. பேப்டிஸ்ட் சபை, மெதடிஸ்ட் சபை முதலானவைகள் இந்த காலத்தில்தான் அபிவிருத்தி அடைந்தன. போப்பரசை அங்கீகரித்திருந்ததைப் போல இவைகளையும் உலகம் அங்கீகரித்தது.

எனினும் போப்பரசு வனாந்தரத்துக்கு செல்லவில்லை. புரட்டஸ்டன்ட் சபை வனாந்தர நிலைமையி–ருந்து வெளியேறி, ஜனங்களாலும், அரசாங்கங்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிலைமை சிலகாலம் தொடர்ந்தது; வேதாகமம் முந்தைய நாளைக் காட்டிலும் அதிகமாக அங்கீகரிக்கப்பட்டது. 1799க்கு பிறகு குறைந்த காலத்திலேயே வேதாகம சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வேதாகமத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தேவனுடைய இரண்டு சாட்சிகளாகிய பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் வானத்துக்கு உயர்த்தப்பட்டன. வேதாகமத்தை ஆதரிக்கிறவர்கள் வெளிச்சத்துக்கு வந்தார்கள். வேத மாணவர்களும் வேதாகம படிப்பும் எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் மிக அதிகமாக அங்கீகாரத்தைப் பெற்றனர். வேதாகமம் அச்சடிக்கப்பட்டு, வேதாகம படிப்பை ஒவ்வொருவரும் விரும்பினர்.

சபையானது மறுபடியும் வனாந்தர நிலைமைக்குச் செல்லும் என்று வேதாகமத்தில் எந்தவித அறிவிப்பும் இல்லை. எ–யா தீர்க்கதரிசியின் அனுபவத்தில் இரண்டாவது வனாந்தர அனுபவம், அடையாள பாஷையில் நமது நாட்களைப்பற்றி நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய உண்மையான சபையைக் குறிக்கிற எ–யா ஒரு உண்மையான தீர்க்கதரிசியாக இருந்தார். யேசபேல் ராணி எ–யாவை வெறுத்து அவனுக்கு விரோதமாக ஆகாப் இராஜாவை தூண்டிவிட்டாள். எ–யா, ராஜாவுக்கு பயந்து ஓடி வனாந்தரத்தில் 1260 நாட்கள், மூன்றரை வருட காலம் இருந்தான். இது 1260 வருடம் சபையானது வனாந்தர நிலைமையில் இருந்ததற்கு அடையாளமாக இருக்கிறது.

எ–யா 1260 நாட்களுக்கு பிறகு வனாந்தரத்தி–ருந்து திரும்பி வந்து ஒரு பெரிய காரியத்தை செய்து காண்பித்தான். ஆகாப் ராஜாவினாலும் யேசபேல் ராணியினாலும் சகாயம் பெற்றிருந்த பாகா–ன் தீர்க்கதரிசிகளை பொது மக்களின் பார்வைக்குக் கொண்டு வந்தான். இந்த வெளிப்பாட்டினால் தேவனுடைய வசனத்திற்கு மகா உயர்வும், பாகா–ன் தீர்க்கதரிசிகளுக்கு வீழ்ச்சியும் ஏற்பட்டது. ஜனங்கள் எல்லாரும் “யேகோவாவே தெய்வம் ” என்றார்கள்.

இவைகளெல்லாம் எப்படி உண்மையான சபை, 1799ல் உலகின் ராஜாக்களுக்கு முன்பாக வெளிப்பட்டு, தேவனுக்காகவும் வேதாகமத்திற்காகவும் நின்றது என்பதை குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். எ–யா உண்மையான சபையையும், யேசபேல் போப்பு சபை மற்றும் அதோடு சேர்ந்த சபைகளையும் குறிக்கிறார்கள். ஆகாப் ராஜா அரசாங்கத்தையும், இஸ்ரேல் ஜனங்கள் உலகத்தையும் குறிக்கிறார்கள். வேதாகமம் யேசபேல், ஆகாப் மற்றும் ஒவ்வொருவர் மீதும் கட்டயப்படுத்தப்பட்டது. ஜனங்கள் அந்த இரு சாட்சிகளையும் கவனித்ததால் அவர்கள் உயர்த்தப்பட்டார்கள்.

### எ-யாவின் இரண்டாவது வனாந்தர அனுபவம்

மறுபடியும் நாம் எ–யாவின் காட்சிக்கு வரும்போது: யேசபேல் அவளது குமாரத்திகள் மற்றும் அவளது குடும்பத்தையும் குறிப்பிடுகிறாள். தீர்க்கதரிசி எ–யா தற்காலத்தில் உள்ள உண்மையான தேவனுடைய பிள்ளைகளை குறிப்பிடுகிறான். ராணி அவனை துன்புறுத்தவில்லை, ஆனால் மிரட்டினாள். ஆகையால் எ–யா மறுபடியும் வனாந்தரத்திற்கு ஓடினான். – எனினும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்ல. பொதுவாக ஜனங்கள் முன் இருந்ததைப் போல் அதேபோன்ற ஒரு கட்டுப்பாட்டில் இல்லை. பாகா–ன் தீர்க்கதரிசிகள் தங்களது செல்வாக்கை மறுபடியும் பெறவில்லை. எ–யா மறுபடியும் வனாந்தரத்திற்கு சென்றான். அங்கே சில காலம் போஷிப்பிக்கப்பட்டான். கடந்த முறை காகத்தால் போஷிப்பிக்கப்பட்டது போல் அல்ல. விசேஷித்த உணவு கொஞ்ச காலத்துக்கு கொடுக்கப்பட்டது.

நம்முடைய புரிந்துகொள்ளுத–ன்படி, எ–யா பாகா–ன் தீர்க்கதரிசிகளை வெட்டிப்போட்ட பிறகு, யேசபேலுக்குப் பயந்து ஓடிப்போன பிறகு, எ–யாவுக்கு கொடுக்கப்பட்ட விசேஷித்த உணவு என்பது தேவனுடைய ஜனங்களுக்கு கொடுக்கப்படுகிற விசேஷித்த செய்தியைக் குறிக்கிறது. எ–யா வனாந்தரத்திற்கு சென்ற பிறகு அவனிடத்தில் ஒரு சரிவு காணப்பட்டது, ஒரு அதைரியம் காணப்பட்டது. “போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்” என்ற வார்த்தை அவனது அதைரியத்தைக் காண்பிக்கிறது, ஆனால் தேவன் அவனை திடப்படுத்தி ஒரு விசேஷித்த உணவைக் கொடுத்தார். அந்த பலத்தைக் கொண்டு ஓரேப் பர்வதம் வரை சென்றான். இந்த பர்வதம் தேவனுடைய ராஜ்யத்தை, மேசியாவின் ராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. இந்த விசேஷித்த உணவின் மூலம் நாம் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தி–ருக்கிறோம் என்ற விசுவாசத்திற்குள் வந்திருக்கிறோம்.

எ–யா ஓரேப் பர்வதம் வந்தபோது, கர்த்தர் மூன்று சாட்சியங்களை கொடுத்தார். (1 ராஜா. 19:1–18) பலத்த பெருங்காற்று தற்கால போரைக் குறிப்பிடுகிறது. பூமி அதிர்ச்சி சமூக புரட்சியைக் குறிக்கிறது. இது இதற்குமுன் நடந்திராதது. அது சீக்கிரத்தில் வரும் என்று நாம் விசுவாசிக்கிறோம். இது போர் ஆரம்பித்தவுடன் வராது; ஆனால் இந்த பூமி அதிர்ச்சி வரும்போது போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். இதுவே முடிவு அல்ல. மூன்றாவது அனைத்தையும் அழிக்கிற அக்கினியாகும். இது அராஜகத்தை குறிக்கிறது. இது சமூக புரட்சியைத் தொடர்ந்து உலகெங்கும் பரவும். அக்கினிக்கு பிறகு, “அமர்ந்த மெல்–ய சத்தத்தை” எ–யா கேட்டான். இது உலகிற்கு ஆசீர்வாதங்களை கொண்டுவருகிற தெய்வீக வல்லமையை குறிக்கிறது.

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. **C.T. ரசல்** அவர்களின் ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர்:
சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண்: 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை– 600 019. கைபேசி: 97909 00030. மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com